## மாமதுரையில் – கழகத் தலைவர்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் 22 கி.மீ. மகத்தான “ரோடு ஷோ”!

## சாலைகளின் இரு மருங்கிலும் மக்கள் வெள்ளம்! உற்சாகமாய் அலைகடலெனத் திரண்டனர்!

**மதுரை, ஜீன்.2 -**

**மதுரையில் நேற்று முன்தினம் மாலை முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்ற 22 கி.மீ. பிரமாண்ட “ரோடு ஷோ” நடைபெற்றது. இதில் லட்சக் கணக்கான மக்கள் திரண்டு வழியெங்கும் உற்சாக வரவேற்பளித்தனர்.**

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொதுக்குழு கூட்டத்திற்கு வரும் முன்பாக நேற்று முன்தினம் (31 ஆம் தேதி) மாலை அவனியாபுரத்தில் புறப்பட்டு வில்லாபுரம் ஜெயவிலாஸ் பணிமனை வழியாக ஜெய்ஹிந்த்புரம், சோலை அழகுபுரம், ஜீவா நகர், பழங்காநத்தம் வழியாக மதுரை காளவாசல், பெத்தானியாபுரம் பகுதி வழியாக ஆரப்பாளையம் கிராஸ் ரோட்டில் அமைந்துள்ள திருமலை நாயக்கர் சிலை வரை சென்று பின் அங்கிருந்து மதுரை புதுஜெயில் ரோட்டில் அமைந்துள்ள மதுரா கோட்ஸ் முன்பாக அமைந்துள்ள மதுரை மாநகராட்சியின் முதல் மேயர் எஸ்.முத்து அவர்களின் திருவுருவ வெண்கல சிலையை திறந்து வைத்து பெருமை சேர்த்தார்.

**முன்னாள் மேயர் முத்து சிலை திறப்பு!**

வில்லாபுரத்திலிருந்து முன்னாள் மேயர் முத்து சிலை திறப்பு விழா மேடை வரை சுமார் 22 கிலோ மீட்டர் தூரத்திற்கு தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக பிரம்மாண்டமான ‘ரோடு ஷோ’ நடைபெற்றது.

மேலும் செல்லும் வழியெல்லாம் மின்விளக்குகள் அமைக்கப்பட்டிருந்தது.

**இரவு பகலாக பாடுபடும்**
**அமைச்சர் பி.மூர்த்தி!**

‘ரோடு ஷோ’வில் சாலையின் இரு புறங்களிலும் சுமார் 2 லட்சத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள், கழகத்தினர் இரு வண்ணக் கொடிகளை கையில் ஏந்தியும், திராவிட அரசின் சாதனைகளை விளக்கும் வகையில், முதல்வர் மற்றும் துணை முதல்வர் உருவம் கொண்ட பதாகைகளையும் கையில் ஏந்தி மாபெரும் உற்சாகத்துடன் வரவேற்பு அளித்தனர். இது போன்று எழுச்சிமிகு வரவேற்பு எங்கும் நடந்ததில்லை என எல்லோரும் பாராட்டும் வகையில் அதற்கான ஏற்பாடுகளை மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் செய்திருந்தனர்.

பொதுக் குழு கூட்டத்தில் பங்கேற்று முக்கிய உரையாற்ற கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புதூரில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு தங்கும் விடுதியில் இருந்து பொதுக் குழுக் கூட்டம் நடைபெறும் உத்தங்குடி கலைஞர் திடல் வரை சாலையின் இரு புறமும் பொதுமக்கள் கழகத்தினர் பெருந்திரளாக திரண்டு இரு வண்ணக் கொடிகள், வரவேற்பு பதாகைகளை கையில் ஏந்தி எழுச்சிமிகு வரவேற்பு கொடுத்தனர்.

தலைவர் அவர்கள் வரும் வழியெங்கும் கிராமிய கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் சுமார் 60 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு எங்கு பார்த்தாலும் கழகத்தின் இரு வண்ணக் கொடிகள் பறக்க விடப்பட்டு மதுரையே விழாக்கோலம் பூண்டிருந்தது.

---

### எல்சா 3 கப்பல் விபத்து: தமிழ்நாட்டின் தென் கடலோர மாவட்டங்களில்

## கடற்கரைப் பகுதிகளில் ஒதுங்கும் பிளாஸ்டிக் பொருட்கள் - இதர பொருட்கள் அகற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

**சென்னை, ஜீன் 2-**

**எல்சா 3 கப்பல் விபத்தால் தமிழ்நாட்டின் தென் கடலோர மாவட்டங்களில் கடற்கரைப் பகுதிகளில் ஒதுங்கும் பிளாஸ்டிக் துகள்கள் மற்றும் இதர பொருட்களை அகற்ற மேற்கொள்ளப்பட்ட முன்னெச்ச ரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.**

தென்மேற்கு பருவ மழை தொடங்கிய நிலையில் கடந்த 24.05.2025 அன்று கேரள மாநில கடற்கரையில் 38 கடல் மைல் தொலைவில் எல்சா 3 என்ற கப்பல் விபத்துக்குள்ளாகி, அதிலிருந்த எரிபொருள், பிளாஸ்டிக் துகள்கள், ஆபத்தான பொருட்கள் கொண்ட பெட்டகங்கள் கடலில் விழுந்தன. வலுவடைந்த தென்மேற்கு பருவ மழையின் காரணமாக பிளாஸ்டிக் துகள்கள், பெட்டகங்கள் உட்பட பிற பொருட்கள் கேரள மாநிலத்தின் கடற்கரையிலும், கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்கு கடற்கரையிலும் கரை ஒதுங்கி வருகிறது.

இது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்றுமுன்தினம் (30.5.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் தென்கடலோர பகுதிகளில் ஒதுங்கும் பிளாஸ்டிக் துகள்கள் மற்றும் பிற பொருட்களால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்துதல், மீன்வளத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்பு மற்றும் சுற்றுச் சூழலை பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், பிளாஸ்டிக் துகள்கள் கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்கு கடற்கரையில் கரை ஒதுங்கியதாக தெரிவிக்கப்பட்ட நிலையில், எண்ணெய் பரவல் உள்ளதா எனவும், மீன்வளம் மற்றும் கடல்சார் உயிரினங்களுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமா என்பது குறித்தும் முதலமைச்சர் அவர்கள் சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாள ரிடம் கேட்டறிந்தார்.

அதற்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய வல்லுநர்களைக் கொண்டு ஆய்வு செய்யப்படுகிறது எனவும், கப்பல் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு, பெட்டகங்களில் ஆபத்து விளைவிக்கக் கூடிய பொருட்கள் உள்ளதா எனவும், இதனால் சுற்றுச்சூழலுக்கு ஏதேனும் ஆபத்து நேரிட்டால் அதனை திறம்பட எதிர்கொள்ள அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தெரிவித்தார். மேலும், தேசிய பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவனம், தேசிய கடலோர நிலைத்திட்ட மேலாண்மை மையம், தேசிய கடல் ஆராய்ச்சி மையம், அண்ணா பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த அறிவியல் வல்லுநர்களுடன் சுற்றுச்சூழல் தாக்கம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, கால்நடை, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர், கடல் வாழ் உயிரினங்கள் மற்றும் மீன்களுக்கு இதனால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா எனவும், பிளாஸ்டிக் துகள்கள் மீன்கள் வயிற்றில் உள்ளதா என்பதை ஆய்வு செய்யவும், இப்பகுதி களில் மீன்பிடிக்கச் செல்வதை தவிர்க்குமாறும் மீன் வளத்துறையால் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர்களுக்கும் மற்றும் தொடர்புடைய அனைத்து அரசு துறை யினருக்கும் பிளாஸ்டிக் துகள்களை அப்புறப்படுத்துவதற்கான அறிவுரைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ளது என்றும், ஊடகங்கள் மூலம் பிளாஸ்டிக் துகள்கள், பெட்டகங்கள் மற்றும் இதர பொருட்கள் கரை ஒதுங்குவதை தொடாமல் தவிர்க்குமாறும், உடனடியாக காவல்துறைக்குத் தெரிவிக்குமாறும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது என்று வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், பிளாஸ்டிக் துகள்கள் மற்றும் பெட்டகங்கள் வானிலை சூழலுக்கேற்ப நகரும் திசை மற்றும் கரை ஒதுங்கக்கூடிய பகுதிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. பிளாஸ்டிக் துகள்களை அகற்ற தன்னார்வலர்கள் மூலம் பாதுகாப்பான முறையில் பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், காவல் துறை, தீயணைப்புத் துறை மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகளை ஒருங்கிணைத்து பணிகள் விரைவாக மேற்கொள்வதை உறுதி செய்யுமாறும், பாதுகாப்பு தொடர்பாக பொதுமக்களும் மீனவர்களும் பின்பற்றவேண்டிய நெறிமுறைகளை வழங்குமாறும் மாவட்ட ஆட்சியர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், இந்நிகழ்வினால் சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த குறுகிய மற்றும் நீண்டகால ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் மீன்வளத்துறையின் மூலமாக மீன்கள் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள் மீதான தாக்கத்தினை கண்டறிய ஆய்வினை துரிதப்படுத்த வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

தற்போதைய நிலவரப்படி எவ்வித ஆபத்தான பொருட்களும் தமிழ்நாட்டின் கடற்கரையில் ஒதுங்கவில்லை. பொதுமக்கள் மற்றும் மீனவர்கள் பிளாஸ்டிக் துகள்கள், பெட்டகங்கள் மற்றும் சந்தேகத்திற்குரிய பொருட்கள் கடலிலோ அல்லது கடற்கரையிலோ கண்டறியப்பட்டால் உடனடியாக மாவட்ட நிர்வாகத்திற்கும் காவல் துறைக்கும் தெரிவிக்க வேண்டும் எனவும், தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையம் சூழ்நிலையை தொடர்ந்து கவனமாக கண்காணிக்க வேண்டும் என்றும், பொதுமக்களின் உயிர் மற்றும் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் அரசால் மேற்கொள்ளப்படும் என்றும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுச் சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என்.சுப்பையன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### கலைஞர் தொலைக்காட்சி செய்தியாளர்

## எஸ்.சக்திவேல் தந்தை சுகதேவன் மறைவு!

### அமைச்சர் இரா.இராஜேந்திரன் அஞ்சலி!

*சென்னை, ஜுன் 2 -*

சேலம் மாவட்ட கலைஞர் டி.வி. செய்தியாளர். எஸ். சக்திவேல் அவர்களின் தந்தையார் சுகதேவன் (வயது 78) உடல் நலக் குறைவால் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



செய்தியறிந்ததும் சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் இரா. இராஜேந்திரன் திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி அவருடைய குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்.

---

### தஞ்சை வடக்கு மாவட்டத்தில்

## முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாள் விழா!

### ஏழை – எளிய மக்களுக்கு நலதிட்டங்கள்! மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி அறிவிப்பு!

*தஞ்சாவூர், ஜுன் 2 -*



உலகெங்கும் வாழும் தமிழர்களின் காவல் அரணாக விளங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்நாள சிறப்பாக கொண்டாட தஞ்சை வடக்கு மாவட்டக் கழக நிர்வாகி களுக்கு வேண்டுகோள் விடுத்து அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு : தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் வழியில் முத்தமிழறிஞர் கலைஞர் தம் வாழ்நாளெல்லாம் கடுமையாக உழைத்து, தமிழர் வாழ்வில் வளமும், வலிமையும் சேர்க்கும் திட்டங்கள் பலவற்றை செயல்படுத்தி கல்வி, அறிவியல், தொழிற்நுட்பம், அரசியல், பொருளாதார, சமுதாய நிலைகள் அனைத்திலும் தலைசிறந்த மாநிலம் தமிழ்நாடு எனும் பெருமையை நமக்கு தேடித் தந்தார். உலகெங்கும் வாழும் தமிழர்களின் காவல் அரணாக தலைவர் கலைஞர் விளங்கிய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான ஜுன் - 3 அன்று காலை 08 மணியளவில் நம் தஞ்சை வடக்கு மாவட்ட தி.முக. சார்பில் விக்கிரவாண்டி தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட வலையப்பேட்டை மாங்குடி கிராம முகப்பில் அமைந்துள்ள கலைஞர் கோட்டத்தில் உள்ள கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்ய உள்ளோம்.

அதுசமயம் முன்னாள் - இன்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக பிரதிநிதிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் தவறாது கலந்துக் கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

மேலும் மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் மற்றும் கிளைச் செயலாளர்கள் தங்கள் பகுதிகளில் கலைஞர் திருவுருவச் சிலை, திருவுருவச்சிலை இல்லாத பகுதிகளில் கலைஞர் அவர்களின் திருவுருவபடத்திற்கு மாலை அணிவித்து, கழகத்தின் இருவர்ண கொடியேற்றி, தங்கள் பகுதிகளில் உள்ள ஏழை - எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும், வருடா வருடம் செய்வதை போல் இந்த வருடமும் ஆதரவற்றோர் இல்லம், முதியோர் இல்லம், அரசு மருத்துவமனைகளில் நலத்திட்ட உதவிகளை செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

---

### ஆயிரம் விளக்கு 113 அ வட்டம்

## கே.சாவித்திரி திருவுருவப் படம் திறப்பு!

*சென்னை, ஜுன் 2 -*

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி 113 அ வட்ட பகுதி பிரதிநிதி தர்மா கே வெங்கட் மற்றும் கே சந்தோஷ் (ஆதி திராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர்) தாயார் கே சாவித்திரி (எ) அஞ்சலை தேவி (திமுக மகளிர் அணி - சென்னை மாநகராட்சி ஒய்வு) அவர்களின் 11 ஆம் நாள் நினைவு அஞ்சலி மற்றும் படத்திறப்பு நிகழ்ச்சி நேற்று முன்தினம் 31.5.2025 மாலை 7:00 மணியளவில், தர்மாபுரத்தில் நடைபெற்றது.

சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு , ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர். எழிலன் நாகநாதன், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி செயலாளர் மா.பா. அன்புதுரை , தியாகராய நகர் மேற்கு பகுதி செயலாளர் கே. ஏழுமலை, தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ், 113 அ வட்டச் செயலாளர் த. தேவராஜ் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டுதிரு உருவப்படத்தை திறந்து வைத்தார்கள்.



புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், பிராம்பட்டியில் புதிய பகுதிநேர அங்காடியினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 28.05.2025 அன்று திறந்து வைத்தார். உடன் துணைப் பதிவாளர் (பொதுவிநியோகத் திட்டம்) ராஜவேலு மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கரூர் மாவட்டத்திற்குப் புதிதாக நியமிக்கப்பட்ட ஒன்றிய – நகர பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டம் 30.05.2025 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழக மேற்கு மண்டல பொறுப்பாளரும் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி கலந்துகொண்டு, இளைஞர் அணி நிர்வாகிகள் ஆற்றவேண்டிய கழகப்பணிகள் குறித்த ஆலோசனைகளை வழங்கினார். கரூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வெங்கமேடு எஸ்.சக்திவேல் வரவேற்புரையாற்றினார். கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்வில், சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து கழகச் செய்தி தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, சமூக வலைத்தளத்தை ஆக்கப்பூர்வமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து விக்னேஷ் ஆனந்த் ஆகியோர் புதிய நிர்வாகிகளுக்கு பயிற்சி வழங்கினர். ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.